# ஒரு சொல்

“உம், என்னமோ! என்னை மாமியார் இல்லாத இடமாகப் பார்த்துக் கொடுத்தும் சுகமில்லை. இங்கே, ஒரு பக்கம் ரிடையராகி, நிர்விசாரமாய் இருக்கிற மாமனார்! இன்னொரு பக்கம் அலக்கழிக்கிற குழந்தைகள்; அவைகளுக்குப் பள்ளிக்கூடத்துக்குச் சமையல் பண்ணி, சிங்காரித்து அனுப்புவதற்குள்ளே, தாவு தீர்ந்துவிடுகிறது. நீங்களோ என்னை என்னமோ ‘அம்மாமி’ என்று எண்ணிக்கொண்டு என் கஷ்டத்தை அறிவதே இல்லை. ஏதோ சின்னஞ்சிறு குடித்தனம் அழகாகச் செய்வோம் என்ற ஆசைக்கே வழியில்லை!”

“பத்மா, குழந்தைகளை மட்டும் தாக்கிப் பேசாதே! என் அம்மா வியாதியா யிருந்தது முதற்கொண்டு நான் அவர்களை வளர்த்துக்கொண்டு வந்திருக்கிறேன். இப்போது உத்தியோகம் பார்க்கவேண்டி யிருக்கிறது. அதனால் தான் அவர்களை கவனிக்க நேரமில்லை.”

“உம், சொல்லமாட்டீர்களா? அப்படித்தானே இருக்கும் என்னைப் பெற்று வளர்த்தவர்களுக்கும்?”

“இதை முதலிலேயே யோசித்துப் பெண்ணைக் கொடுக்க உன் அப்பா அம்மாவுக்கு புத்தியில்லையோ?”

“கடைசிவரை நான் உங்கள் மனுஷாளைத் தாங்கணும், நீங்கள் என் அப்பா அம்மாவைத் தூக்கியெறிந்து பேசணும்! உலகத்து நியாயம் இருக்கே . . . .”

பத்மாவின் பேச்சு முடியவில்லை. ‘கத்திக்கொண்டிரு, எனக்கென்ன?’ என்ற பாவனையில், அவள் கணவன் ஆபீசுக்குப் புறப்பட்டுவிட்டான்.

கூடத்தில் இருந்த ஏழெட்டு எச்சிலிடங்களையும் சுத்தி செய்துகொண்டிருந்த பத்மாவுக்குக் கணவனின் அலட்சியம் சாட்டை கொண்டு தன்னை வீறுவது போல இருந்தது.

இது போன்ற காரசாரமான விவாதம் அதற்கு முன் நிகழ்ந்ததில்லை அவ்விருவருக்கும். பத்மாவும் நல்லவள் தான், அவள் புருஷனும் நல்லவன் தான். ஆனால் என்ன காரணமோ கொஞ்ச நாளாக அவர்கள் இருவருக்கும் இந்தச் சிறு சச்சரவு ஏற்பட்டிருந்தது.

பக்கத்து வீட்டிலே ராஜமும் அவள் புருஷனும் செய்கிற குடித்தனத்தைப் போலத் தன் குடித்தனம் இல்லையே என்று பத்மாவுக்குக் குறை. அப்பேர்பட்ட குறை அவளுக்கு ஏற்பட நியாயமுண்டு, என்ற நினைப்பு அவளுக்கு. அவன் பத்மாவை கோபிப்பதில்லை; ஆனால் நடக்கமுடியாததைக் குறித்து வாய்க்கு வாய்ச் சொல்லிக்கொண்டு ஆங்காரப்படுவதில் என்ன பயன்? அந்த அறிவு அவளுக்கு இருக்கவேண்டாமா என்று அவனுக்கு அன்றுதான் கோபம் பிறந்தது.

தன்னுடைய தாயார் இறந்து போனதால், நாதியற்றிருக்கும் தன் தந்தைக்கும், தன் தம்பி தங்கையருக்கும் செய்யவேண்டியவள், தன் மனைவி பத்மா தானே? அதை அவள் மறக்கலாமா? தான் செய்துகொண்டிருக்கவில்லையா, தன்னாலியன்ற பணிகளை, அந்த நாள் வரையில்? தான் உத்தியோகம் மேற்கொண்டதும், தனக்கு ஏற்பட்டிருந்த பொறுப்பை, மனைவி ஏற்று நிர்வகிக்க வேண்டியதுதானே நியாயம்? ஏன் பத்மாவுக்கு இது தெரியாமற்ப் போய்விட்டது? புக்ககம் வந்த ஆறேழு மாதங்களுக்குள் இவ்வளவு வெறுத்துக்கொள்கிறாளே? இப்படித்தான் அவன் எண்ணினான்.

*2*

கணவனின் அலட்சிய பாவத்தைக் கொஞ்ச நேரம் வரை மறக்கமுடியவில்லை பத்மாவுக்கு. ஆனால் அப்புறம் அதை மறக்கடித்துவிட்டது, அவளுடைய சிநேகிதி சீதாவின் வருகை.

இரண்டுபேரும் பல விஷயங்களைப் பற்றிப் பேசிகொண்டு வரும்போது, “உன் உடம்பு ஏன் இப்படி இளைத்திருக்கிறது?” என்று பத்மா சீதாவைக் கேட்டாள்.

“என் உடம்புக்கென்ன பத்மா - அவருக்குத்தான் உடம்பே நேரில்லை. ஆஸ்பத்திரியிலே இரண்டு மாதம் சேர்த்திருந்தோம். எத்தனை நாள் அங்கே யிருக்கமுடியும்? வீட்டுக்கு அழைத்துவந்த அப்புறமும் அவருக்கு குணமாகவில்லை. எனக்கு மனசுக் கவலைதான். ராத்திரி கண் விழித்துக்கொண்டு அவருக்கு வேண்டியவற்றையும் நானே செய்தால்தான் எனக்கு சிறிது ஆறுதலாயிருக்கிறது. அதனாலே ஏதோ கொஞ்சம் நானும் இளைத்திருக்கிறேன்,” என்றாள் சீதா.

இப்படி தன்னிடம் சொன்ன சீதாவின் உருவமும், வார்த்தைகளும் அன்று முழுவதும் பத்மாவின் கவனத்தை விட்டு அகலவேயில்லை. அவளுடைய கண்களிலே வந்து நின்ற அந்த உருகிப் போன உருவமும், செவிகளில் ஒலித்துக்கொண்டிருந்த அந்த உருக்கமான சொற்களும், பத்மாவின் செயலிலும், பேச்சிலும் நயத்தைப் புகுத்தியவண்ணம் இருந்தன.

“பத்மா, பார்த்தாயா சரசுவின் கடிதத்தை, இந்தா படி!” என்று சொல்லிக்கொண்டே அம்மாளு மாமி அடுத்த நாள் வந்தாள்.

பத்மா கடிதத்தை வாங்கிப் படித்துப் பார்த்தாள்.

“நாள் முழுக்கக் காரியம் சரியாக இருக்கிறது - வீட்டிலே மாமியாருக்கு உடம்பு சரியில்லை. நாத்தனார்கள் மூன்று பேரும், பொறுப்போ, நல்ல எண்ணமோ தமக்கு அவசியமில்லை என்று எண்ணுபவர்கள். வேலைக்காரி கிடையாது வீட்டிலே. இரண்டு வேளை சமையல். வேலைக்காரி காரியம், வீட்டுக் காரியம் எல்லாம் நான் தான் செய்கிறேன். ஆனால் என் மனம் திருப்தியாயிருக்கிறது. உடம்பு சிரமம் தெரியவேயில்லை. எத்தனைபேர் இருந்தாலும், எனக்கு என்று ஏற்பட்டிருக்கும் பொறுப்பைப் பார்த்துப் பெருமையாகவே பாவிக்கிறேன் நான், நீ கவலைப்படவேண்டாம்.”

இந்தப் பகுதிதான் பத்மாவின் உள்ளத்திலே ஊன்றியது. “பாவம், ரொம்ப கஷ்டப்படுகிறாள், மாமி!” என்று மட்டுமே பதில் சொன்னாள் பத்மா.

பத்மாவின் உள்ளத்திலே, இரண்டு நாள் வரை அம்மாளு மாமியும், சரசுவும் ஆட்சி செய்யலானார்கள்.

நான்கைந்து தினங்கள் சென்றன. தன் தாய்க்கு கடிதம் எழுதி நாளாயிற்றே என்று நினைத்துக்கொண்ட பத்மாவுக்கு, எழுதலாமா வேண்டாமா என்ற யோசனை எழுந்தது. தனக்கு ஏற்பட்டிருந்த அலுப்பு சலிப்பு எல்லாவற்றையும் அம்மாவுக்கு எழுதி தீர்த்துவிடுவது என்று தீவிரமாக நாலு நாட்களுக்கு முன்பு நினைத்துக்கொண்டிருந்த பத்மா, இப்பொழுது என்ன எழுதுவது என்ற யோசனையில் ஆழ்ந்தாள். அவள் மனம் குழம்பியிருந்தது.

கடைசியில் அன்று கடிதம் எழுதுவதில்லை என்று நிச்சயம் செய்துகொண்டாள். பொழுதுபோக்கிற்கு, திருச்சியிலிருந்த தன் சிநேகிதி லக்ஷ்மிக்குக் கடிதம் எழுதினாள். லக்ஷ்மியிடமிருந்து ஐந்தாறு நாட்களில் பதில் வந்தது.

“என் மாமியார் தங்கமானவர். காலையில் சமையல் செய்துவிடுவார். எல்லோருக்கும் பரிமாறி விடுவார். காலைச் சமையலை என்னிடம் ஒப்புவிக்கும் வழக்கமே இல்லை. எல்லோரும் சொல்வதுபோல நான் ஒரு விஷயத்தில் அதிருஷ்டசாலிதான். கணவரும், மாமியார், மாமனாரும் என் மீது அந்தரங்கமான அன்பு கொண்டவர்கள்.

ஆனால் என் மனதிலிருக்கும் ஒரு குறையைச் சொல்லிவிடுகிறேன். என் நாத்தனார்கள் இருவரும் கொஞ்சம் புஸு புஸு. அவர்களுக்குக் குளிக்க நீர் இரைத்து வைத்து, உடுக்கவேண்டிய ஆடைகளை _எடுத்து வைப்பது, பழைய ஆடைகளை தோய்த்து, உலர்த்தி, மடித்து வைப்பது, இன்னும் அவர்களுடைய குழந்தைகளுக்குக் குளிப்பாட்டி அலங்கரிப்பது, மற்ற குற்றேவல்கள் எல்லாம் என்னுடைய வேலைகள். காலை வேலையில் அவர்களுக்கு சிசுருஷை செய்யவே எனக்குப் பொழுது சரியாகிவிடும். என் மாமியாருக்கு ஒன்றுமே ஒத்தாசை செய்ய முடிவதில்லை. நான் இதுபோன்ற குற்றேவல்களை செய்வதிலேயே என் பொழுது

சரியாய்ப்போய்விடுவதை அறியாத அக்கம்பக்கத்தார், "அந்தப் பெண்ணுக்கு என்ன அதிருஷ்டம்! மாமியார் காலையிலே சமைத்துப் பரிமாறி எல்லாம் செய்துவிடுகிறாள்; எளிதான இரவுச் சமையல்தான் நாட்டுப்பெண்ணுக்கு!" என்று _சொல்கிறார்கள். அதைக் கேட்கும்போது தான் என் மனசில் 'சுருக்'கென தைக்கிறது.

நாத்திமார் இடும் குற்றேவல்களும், அன்றாடப் பொழுது காரியங்களும் எனக்குச் சரியாக இருப்பதால், எனக்குப் புத்தகம் வாசிப்போம், பாட்டுப் பாடுவோம் என்ற ஆசைகளுக்குத்தான் வகையில்லை என்றால், மாமியாருக்கு ஒத்தாசையாக சமையலுக்கு அரைத்துக்கரைத்துக் கொடுக்கவாவது முடியக்கூடாதா? வயதானவருக்குச் செய்யாமல், யார் யாருக்கோ செய்கிறோமே என்ற என் குறை பிறத்தியாருக்குத் தெரிகிறதா? என் மாமியார்தான் அறிவார். 'எத்தனைன்னு நீயே செய்வாய்? அவர்களத் திருப்தி செய். நான் ஒன்றும் நினைத்துக்கொள்ளமாட்டேன்,' என்று சொல்லும் என் மாமியார் தான் என்னை நன்கு அறிவார்."

பத்மாவுக்கு மனதை என்னமோ செய்தது. கண்களில் இரண்டுப் பொட்டுக் கண்ணீர் தெறித்தது. மளமள வென்று என்னமோ எழுதினாள். மாலை ஆபீசிலிருந்து கணவன் வந்ததும் அதைக்கொடுத்துவிட்டு, "இதைப் படியுங்கள்," என்று கூறிவிட்டு, அப்பால் போனாள் அவள்.

ஒன்றும் பேசாமல் காகிதத்தை படிக்கலானான் அவனும். அது திடீரென்று இப்படி ஆரம்பமாயிற்று:

"புருஷனுக்காக மட்டும் இரவு பகல் உழைத்து, உடலும் உள்ளமும் உருகிப்போகிறாள் சீதா.

"உண்மையான அதிகாரமும் சலுகையும் செல்வாக்கும் ஒருவர்பால் இருக்க, காரியப் பொறுப்பை மட்டும் முழுக்க முழுக்கத் தான் ஏற்றுக்கொண்டு, 'நானே ராணி,' என்று பெருமிதங்கொண்டு தன் உடலை வாட்டிக்கொள்கிறாள் சரசு.

"ஊரார் கண்களுக்கு 'அதிருஷ்டசாலி' போல தென்படும் லக்ஷ்மி . . . அந்தோ! குடத்தில் விளக்கென இருக்கிறாள்.

"நான்? ஊரார் கண்களுக்கு முன்னே, வீட்டு எஜமானியாகத் திகழ்கிறேன். 'பாவம், அந்தப் பெண்ணுக்குத்தான் வீட்டுப் பொறுப்பெல்லாம். சிறிசு!' என்ற புகழ் மாலை எனக்கு. சுதந்திரமாய் இந்த வீட்டிலே ஆ_ட்சி செலுத்தும் எனக்கு, அவர்கள் மூவரும் படும் கஷ்டத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு இல்லை,

"வீணாக தங்கள் மனதைப் புண்படித்துவிட்டேன், மன்னிக்க வேண்டும்!" என்று எழுதியிருந்தது.

கடிதத்தைப் படித்ததும் ராஜு பத்மாவைக் கூப்பிட்டான். "எப்படியும் நீ ராஜாத்திதானே பத்மா?" என்றான்.

"இல்லை, நல்லவளும் தான்; அப்படியும் பொல்லாதவள் தான்1 நல்ல பசுவுக்கு ஒரு சூடு, நல்ல் பெண்ணுக்கு ஒரு சொல்!"

"நீ தான் இவ்வளவு சீக்கிரத்திலேயே திருத்திக் கொண்டுவிட்டாயே!" என்று கூறிப் புன்னகைப் புரிந்தான் 'ராஜாத்தி' யின் புருஷன் ராஜு.

"நல்ல பசுவுக்கு ஒரு சூடு. ஆனால் எனக்கு மூன்று சூடு வேண்டியிருந்தது!" என்று பதிலளித்த பத்மாவின் வார்த்தைகளின் உட்கருத்து ராஜுவுக்கு விளங்கவில்லை. இருந்தாலும் அவன் சிரித்துவைத்தான்.

********

(வெள்ளிமணி, அக்டோபர் 3, 1947)